PR/2019/09/T

# ஜப்பான் தூதரகம்

இல .20, ஸ்ரீமத் ஆர்.ஜி .சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி :94-11-269-3831~3 தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல் :cultujpn@sltnet.lk

பெப்ரவரி 27, 2019

**ஊடக அறிக்கை**

**JDS புலமைப்பரிசில் மூலம் உயர்கல்வியைப் பூர்த்திசெய்தவர்களுடன் ஜப்பானிய தூதுவர் சுகியாமா சந்திப்பு**



**JDS புலமைப் பரிசில் பெற்றவர்கள், இலங்கை அரச உயர் அதிகாரிகள் திறைசேரியின் செயலாளர் R.H.S. சமரதுங்க, ஜப்பானிய தூதுவர் அதி மேன்மைதகு திரு. அகிரா சுகியாமா**

இலங்கை அரச ஊழியர்களின் திறனையும் அறிவையும் விருத்தி செய்யும் நோக்கோடு ஜப்பானிய அரசாங்கம் மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசில் திட்டத்தினை (JDS)

அறிமுகப்படுத்தி 2010 ஆம் ஆண்டிலிருந்து நிதிப்பங்களிப்புச் செய்து வருகின்றது. இதன்மூலம் எதிர்காலத்தில் இலங்கையின் தேசிய அபிவிருத்தியில் இவர்களின் பங்களிப்பு கிடைக்கப்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத் திட்டத்தின் மூலம் 105 அரச ஊழியர்கள் இரண்டு வருட முதுகலைப் படிப்பினை தொடரலாம்.. பொதுக் கொள்கை, பொது நிதி, பொருளியல், வியாபார முகாமைத்துவம் மற்றும் சூழலியல் முகாமைத்துவம் போன்ற துறைகளை ஜப்பானிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் தொடரமுடியும்.

பெப்ரவரி 26 ஆம் திகதி, ஜப்பானிய தூதுவர் அதிமேன்மைதகு திரு. அகிரா சுகியாமா தனது வாசஸ்தலத்தில் வரவேற்பு நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தார். இதில் திறைசேரியின் செயலாளர் கலாநிதி R.H.S. சமரதுங்க, சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்ததோடு நாடு திரும்பிய JDS புலமைப்பரிசில் பங்காளர்களை வரவேற்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார். இந் நிகழ்வில் தூதுவர் சுகியாமா உரையாற்றுகையில், இவ் JDS பங்காளர்கள் ஜப்பானில் அவர்கள் கற்ற தலைமைத்துவ விடயங்களையும் அனுபவங்களையும் கொண்டு இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் என ஜப்பானிய அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். அத்துடன் இதன்மூலம் ஜப்பான், இலங்கை நாடுகளிற்கு இடையேயான உறவை பலப்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(முற்றும் )

**********************************************************

மேலதிக தகவல்களிற்கு கலாசார பிரிவினை தொடர்புகொள்ளவும்
Tel: 011-269-3831~3 (ext.227)